அதிபர் அமரர் செல்லப்பா இளையதம்பி அவர்களின் சேவை (1969-1970) நினைவாக....

# சாரல்

இதழ்: 09

ஆனித்திங்கள் 2017

வள்ளுவர் ஆண்டு 2048

**OBA** ஆண்டு செய்தி மடல்

30.06.2017

பழையமாணவர் சங்கம்

தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



## முன்னைநாள் அதிபர் அமரர் செல்லப்பா இளையதம்பி

மட்டக்களப்பு ஆரையம்பதியினிலே செல்லப்பா அன்னபூரணி தம்பதியினருக்கு கனிஷ்ட புத்திரராக 18.07.1914ம் தினத்தன்று இப்பூமியில் அவதரித்தார். இவர் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் தனது கல்விப் பயணத்தைத் தொடர்ந்து 1934 இல் S.S.C பரீட்சையில் சிறப்புச் சித்தியடைந்து அதனைத் தொடர்ந்து Cambridge Senior Matriculation பரீட்சையிலும் 1936ம் ஆண்டு ஆசிரியர் தராதரப்பத்திர பரீட்சையிலும் சித்தி எய்தினார். அதுமட்டுமல்லாமல் 1941ம் ஆண்டில் கொழும்பு மகரகம ஆங்கில பயிற்சிக்கல்லூரியில் ஆங்கில பயிற்சியை மேற்கொண்டு 1942ம் ஆண்டில் English Diploma பட்டத்தையும் பெற்றார்.

01.09.1943ம் ஆண்டு கண்டி அம்பிட்டியா St Bruvat College இல் ஆங்கில ஆசிரியராக தனது முதலாவது நியமனத்தைப் பெற்றார். தொடர்ந்து அதிபராக பதவி உயர்வு பெற்று 1943 முதல் 1944 வரை மட்டக்களப்பு காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் பணி யாற்றினார். பின்னர் 1944 முதல் 1945 வரை மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் கடமை யாற்றி அதனைத் தொடர்ந்து 1946 முதல் 1969 வரை தொடர்ச்சியாக 23 ஆண்டுகள் மட்டக்களப்பு வாழைச் சேனை தமிழ் மகா வித்தியாலயத்தில் சிறப்பாக பணியாற்றி முதலாந்தர அதிபராக பதவி உயர்வு பெற்றார். இவரது அளப்பரிய சேவையின் பொருட்டு மட்டக்களப்பு கல்விச் சமூகம் பாராட்டிக் கௌரவித்தது.

இதன் பின்பு இவரது இறுதி காலத்தை கௌரவிக்கும் முகமாக கல்வித்திணைக்களம் உயர்தரப் பாடசாலையான திருகோணமலை இ.கி.ச இந்துக் கல்லூரிக்கு 01.05.1969 முதல் அதிபராக அமர்த்தப்பட்டார். பின்பு 31.12.1970 இல் அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவரது காலப்பகுதியில் கல்லூரியின் பௌதீக வளங்களின் வளர்ச்சியும் கல்வியுடன் இணைந்த இணைப்பாடவிதான செயற்பாடுகளும் சிறந்து விளங்கின. அதுமட்டுமல்லாமல் தான் பெற்ற ஆங்கில புலமையை மாணவர்கள் மட்டத்தில் தேர்ச்சியடைய அரும்பாடுபட்டார். இதனால் இவரதுகாலப்பகுதியில் ஆங்கில பெறுபேறுகள் உயர்மட்டத்தில் காணப்பட்டன. அத்துடன் இவரது செயல்பாடுகளுக்கு சகல ஆசிரியர்களும் பூரண ஒத்துழைப்பை நல்கியிருந்தமையை எமதுகல்லூரியின் ஆவணங்களிலிருந்துஅறியக் கூடியதாகவுள்ளது.

இவர் தனதுகல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் பல சமூக சமய பணிகளில் தன்னை ஈடுபடுத்தி 10.12.1989 அன்றுசிவபதம் அடையும் வரை சமாதான நீதவானாகவும் பணிபுரிந்தார்

இவர் தற்பொழுது எம்மை விட்டு நீங்கிச்சென்றாலும் இவரது பணி என்றென்றும் எம்மனதை விட்டு நீங்காது

ஆவணத் தொகுப்பு:
- திரு.ந.இரத்தினவடிவேல் J.P -
பழைய மாணவர் சங்கம்

### தூரநோக்கு

ஒழுக்க விழுமியங்களிலும், கல்வியிலும், மொழியியல் தேர்ச்சியிலும், இணைப்பாடவிதானங்களிலும் சாதனை படைக்கும் ஒரு முன்மாதிரியான கல்லூரி

### பணிக்கூற்று

கல்லூரியின் அடைவுகளை உச்சப்படுத்துவதற்கும், தேவையான வளங்களைத் தேடிக்கொள்வதற்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்களினதும் வளவாளர்களினதும் பங்களிப்புடன் கூடிய சேவை அர்ப்பணிப்பு.

### Vision

"An exemplary College in creating best records in discipline, education, Lingual proficiency and co-curricular activities."

### Mission

"Dedication of Service with the contribution of the resource persons and the old students living in inland and abroad for Obtaning the required resource and Maximizing the achievements of the college"

வெளியீடு : OBA, Trinco, Hindu
e-mail : oba@trincohindu.sch.lk
Web : www.trincohindu.sch.lk/oba/index.htm

ஆலோசகர் : திரு.செ.பத்மசீலன்
பதிப்பாசிரியர் : திரு.அ.செல்வேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் வாழ்த்துச் செய்தி...

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கமானது 1937ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு 80 வருடங்கள் கடந்த நிலையில் தனது பணியை ஆற்றி வருகின்றது. கல்லூரியில் கற்ற மாணவர் கல்வியை நிறைவுசெய்து வெளியேறிய பின் சங்கத்தின் அங்கத்துவத்தை பெறுவதன் மூலம் பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர் என்ற அந்தஸ்தை பெறுகின்றனர்.

கல்லூரியின் பல்வேறு செயற்பாடுகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பழைய மாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்துடன் இணைந்து பல பணிகளை ஆற்றி வருவதையிட்டு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். மேலும் கொழும்பு நகரில் வசிக்கின்ற பழைய மாணவர்கள் ஒன்றிணைத்து பழைய மாணவர் சங்கமொன்றினை ஸ்தாபித்து செயற்பட்டு வருகின்றனர். அதே போன்று இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளில் வாழ்கின்ற பழைய மாணவர்கள் அங்கு பழைய மாணவர் சங்கத்தை ஸ்தாபித்து தமது உறுப்பினர்கள், குடும்ப உறுப்பினர்கள் இணைந்து ஒன்றுகூடல், விளையாட்டு முயற்சிகள் என்பனவற்றை நடத்துவதுடன் இங்குள்ள மாணவர்களது கல்வி அபிவிருத்திக்காகவும், மாவட்டத்தின் சில பாடசாலை களில் கல்வி அபிவிருத்தி பௌதீகவள அபிவிருத்தி தேவைகளை தாய்ச்சங்கத்துடன் இணைந்து வழங்கி வருவதை பாராட்டுகின்றேன். பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலில் வெளியிடப்படும் 'சாரல்' கையேடு பழைய மாணவர் சங்க செயற்பாடுகள், கல்லூரியின் செயற்பாடுகள், பாராட்டு நிகழ்வு, கல்வி பெறுபேறுகள் இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கி வெளிவருவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

திரு.செ.பத்மசீலன்
தலைவர்-பழையமாணவர் சங்கம்
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
(தேசியபாடசாலை)
திருக்கோணமலை

## காந்தியடிகள் வழி வாழ்ந்த (ஆனந்தம்) காந்தி மாஸ்டர்

வடமாகாணத்தின் பெருமை நல் அடையாளமாகிய யாழ்பாணத்தில் எழில் மிகு மாதகல் எனும் கிராமத்தில் நூணசை பகுதியில் பொண்ணம்பலம் நன்னிப்பிள்ளை (சுழிபுரம்) தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக கந்தையா (காந்தி மாஸ்டர்) அவதரித்தார். கந்தையா அவர்களின் தந்தையார் மலாயா நாட்டு மண்ணில் தொழில் புரியும் காலத்தில் அங்கு அவர் இயற்கை எய்தினார். அவர் இறக்கும் போது கந்தையா அவர்களுக்கு வயது ஏழு.



இவர் தனது கல்வியை நூணசை முருக மூர்த்தி வித்தியாலயம், மாதகல் விக்கினேஸ்வரா வித்தியா யலம், பன்னாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்று சிரேஸ்ட பாடசாலை தராதர பரீட்சையில் சித்தியடைந்தார்.

பண்டிதர் கா.பொ.இரத்தினம் தலைமை ஆசிரியராக கடமையாற்றிய பாடசாலையில் (1936-1937) இவரை ஆரம்ப வகுப்பு ஆசிரியராக நியமித்தார். இதே வேளை யில் 1936ல் நடைபெற்ற ஆசிரியர் தராதர பரீட்சையில் சித்தியடைந்து 1938ல் வவுனியா கருங்காலிக்குளம் அரசினர் பாடசாலையில் முதல் ஆசிரியர் நியமனத்தை பெற்றார்.

தனது காந்திய கொள்கைக்கு தனது ஆசிரியர் தொழில் தடையாக இருப்பதாக கருதி 1946ல் ஆசிரியர் பணியில் இருந்து தானாகவே விலகிக் கொண்டார். ஆனால் இவரது சேவையை அறிந்த இராமகிருஷ்ண சங்க பாடசாலைகளின் முகாமையாளராக இருந்த சுவாமி நடராஜானந்தா மூலம் கொக்குவில் இராமகிருஷ்ண சங்க பாடசாலைக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அங்கிருந்து திருகோணமலை இராமகிருஷ்ண சங்க தமிழ் பாடசாலைக்கு மாற்றம் வழங்கப்பட்டது.

மகாத்மா காந்தியடிகள் 1948 இல் காலமாகியதை தொடர்ந்து யாழ்பாணத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தை ஆரம்பித்து அதில் பொது காரியதரிசி எனும் பதவியில் செயற்ப்பட்டு வந்தார். 1952 இல் உப்புவெளியில் அமைத்திருந்த ஆதரவற்ற குழந்தைகள் காப்பகமாகிய சிவானந்த தபோவனத்தில் தலைமையாளர் தாய் மாதஜிக்கு பக்கபலமாக இருந்து தபோவன கணக்கு பதிவேடுகளை பராமரித்து வந்ததுடன் அவர் ஒரு தொண்டராக கடமையாற்றியதுடன் தொடர்ந்து அதன் பணியில் தன்னை அர்பணித்து வந்தார்.

திருகோணேஸ்வர ஆலய முதல் புனருத்தான கும்பாபிஷேகம் நடைபெற்ற போது அச்சபையின் அங்கத்தவராக இருந்து நிதிநடவடிக்கைகளுக்கு பொறுப்பாக செயற்பட்டார்.(1944-1945) காலப்பகுதியில் கதர்வேட்டி சால்வையுடன் பாடசலைக்கு செல்லும் ஆசிரியர் கந்தையா (காந்தி மாஸ்டர்) அவர்கள் பெரியகிண்ணியா அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கற்பித்த ஆசிரியை ஒருவரை கண்டு கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இச் சந்திப்பின் பயனாக இருவீட்டார் சம்மதத்துடன் 1953 வைகாசி 28 அன்று இவர்களது இருவரது திருமணம் சர்வோதய முறைப்படி எவ்வித ஆடம்பரமும் இன்றி நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி மாஸ்டர் திருமணம் நடந்த சுப தினத்தில் திருகோணமலையில் முதல் திருக்குறள் மாநாடு நடைபெற்றது. அதில் பங்குபற்றிய எமது சமயதலைவர்கள், பெரியார்கள் அன்றைய தினம் திருமண பந்தத்தில் இணைந்த தம்பதிகளை சிறப்புற வாழ்தினார்கள். இவர்களுக்கு கதிர்காமநாதன் (முருகன்) என்ற மகன் உள்ளார்.

திருக்கேதீஸ்வர மகோற்சவ முதலாம் திருவிழா உபயம் திருகோணமலை இந்துக்கல்லூரிக்கு உரித்தாக இருந்த போது அக்காலத்தில் அதிபராகவிருந்த எஸ். அம்பலவாணன் அவர்கள் இத் திருவிழா பொறுப்பை திருகோணமலை சைவஅடியார்கள் பொறுப்பு ஏற்கும்படி கேட்டுக்கொண்டதற்கு இணங்க காந்தி மாஸ்டர் பொறுப்பேற்று பல கஷ்ட துன்பங்களுக்கு மத்தியிலும் திருவிழாவிற்கு சைவ அடியார்களை அழைத்து செல்லும் பொறுப்பு உட்பட இத் திருவிழா பொறுப்புக்கள் அனைத்தையும் காந்தி மாஸ்டர் தலைமையில் திருகோணமலை திருக்கேதிஸ்வர திருவிழா சபை இத் திருவிழாவை சிறந்த முறையில் நடாத்தி வருகிறது.

1959 இல் யோதிய சுவாமி தலைமையில் மனைவி, மகன் (நான்கரை வயது) உட்பட 17 பேருடன் திருகோணேஸ்வரத்தில் இருந்து 44 நாட்கள் கால்நடையாக கதிர்காமம் (223 மைல்) செல்லும் போது செல்லும் வழியில் பல ஆலயங்களையும் தரிசித்து திருகோணேஸ்வர ஆலயத்தில் மீண்டும் நிறைவு செய்தார்

மதமாற்றம் மூலம் வாழ்க்கையில் எவ்வித பயனும் ஏற்படாது எனவும் தன் மதத்தை ஆழ்ந்து ஆராய்ந்து தன் மதத்தில் நம்பகத்தை வைத்து வாழ்ந்தால் மேல் நிலையை அடையலாம் என எடுத்து கூறினார்.

நமது மாணவர்கள் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் சத்தியம் செய்து கொடுத்து பிற்காலத்தில் அதனை பேணவேண்டும் எனவும் தெய்வதன்மை மிக்க மாணவர்களிடம் இப்படி சத்தியம் கேட்பதற்கு பெற்றோரும் ஆசிரியர்களும் தம்மை தயார்படுத்தி கொள்ள வேண்டும். இலட்சிய வாழ்வு வாழும் ஆசிரியர்கள் தான் பாடசாலையில் அமர்த்தப்படல் வேண்டும். இலட்சிய வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக ஆசிரியர்களும் பாடசாலைகளும் அமைய வேண்டும் என்பவை இலட்சிய வாழ்வு வாழ்ந்த காந்தி மாஸ்டரின் கொள்கைகளாகும்.

காந்தி மாஸ்டர் யாழ்பாணத்தில் பிறந்து திருகோணமலையில் சேவையாற்றி தன் வாழ்நாள் முழுவதும் எம் இந்து சமயம் மேலோங்கி தழைக்க அயரது உழைத்த எம் காந்தி ஐயாவிற்கு இவ் சிற்றுரையை சமர்பணம் அளிப்பதில் பெருமை கொள்கின்றோம்.

தொகுப்பு:
நல்லதம்பி குமணன்
பொருளாளர்.
பழைய மாணவர் சங்கம்

# A meeting with the president of the Old Boys' Association of the T/R.K.M Srikoneswara Hindu College – London Branch.

A meeting was organized by the former secretary of the OBA Trinco Hindu College, Mr.S.Barathinathan with the president of the OBA London Mr.T.Pavanakumar for discussing the prevailing activities of the OBA of the RKM Sri Koneswara Hindu College Trincomalee.

The Hindu college principal, deputy principal and vice president of the Trinco Hindu OBA Mr.R Kailavasan were also present in this meeting which was held on 26th Feb, 2017, at JKAB Hotel, Uppuveli.

Some Important issues of the OBA activities were discussed in this meeting and the president of London OBA requested us to uplift the activities of the OBA of the Trinco Hindu College. Further he added in his speech that if the progress was shown by the old boy's association of Hindu College Trincomalee, London OBA would not hesitate to assist the OBA of the Trinco Hindu College for further improvement.

The Hindu college principal in his part explained the prevailing situation of the old Boys' Association of the college and the difficulties which are faced by the college administration. Besides, he didn't fail to indicate some challenging issues which are faced by the college administration because of the influence of the technology that paves the way to scatter the sense of the students.



The deputy principal of the college and the vice president of the old boys' association also briefly expressed the current position of the college administration and the Old Boys' Association respectively.

At the end of the meeting, we all collectively agreed to commence the construction work of the office building for the Old Boys' Association in our college premises.

The meeting was ended up with the pleasure of night dishes shared by the president of the OBA London.

Eventually, we collectively offered our gratitude to our London OBA president Mr.T.Pavanakumar on behalf of the Old Boys' Association of the T/R.K.M Sri Koneswara Hindu College, Trincomalee, for the courtesy invitation made by him to us.

By: Shanbarathinathan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 யூலை தொடக்கம் 2017 ஜீன் வரையான காலப்பகுதியில் பழைய மாணவர் சங்கத்தின் காத்திரமான பணிகள்

2016 ம் ஆண்டு தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் கலச்து கொண்ட திருக்கோணமலை மாணவர்களுக்கு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் நிதி உதவியுடன் இலவச செயலமர்வு நடத்தப்பட்டது.

2007ம் ஆண்டு உயர்தர மாணவர்களின் ஒத்துழைப்புடன் ரூபா 125.000.00க்கு ஆய்வுகூட பொருட்களை கொள்வனவு செய்து வழுங்கியமை.

கல்லூரியின் பழைய மாணவரான தர்மேந்திராவின் உதவியுடன் மைதானத்தில் ரூபா 400.000.00 செலவில் தண்ணீர்தாங்கி அமைத்தமை.

ஆரம்பப் பிரிவு பரிசளிப்பு வைபவத்திற்கான நிதி அனுசரனைகளை பெற்றுக்ககொடுத்தமை.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் நாதன், சூரியகுமாரின் உதவியுடன் ஆசிரியர்களுக்கான தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக இரு நாள் கருத்தரங்கு நடாத்தியமை.

காளி கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எமது பழைய மாணவர் சங்கத்தினால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

காளி கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எமது பழைய மாணவர் சங்கத்தினால் சிறிய சிற்றூண்டிச்சாலை ஒன்று நடாத்தப்பட்டு வருமானம் உழைத்தமை.

தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் 3வது இடத்தைப் பெற்ற எமது கல்லூரி மாணவன் உ.கேஷிகனுக்கு தங்கப்பதக்கம் வழுங்கப்பட்டதுடன மாவட்ட மட்டத்தில் 6வதாக வந்த மாணவனுக்கு ரூ. 3000.00 வழுங்கியமை.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் திரு ராஜசேகர் என்பவரின் உதவியுடன் நான்கு மடிக்கணினிகள் பெறப்பட்டு கல்லூரியின் பாவனைக்காக வழுங்கப்பட்டமை.

இந்தியா சென்று சர்வதேச கணிதப் போட்டியில் வென்ற 8 மாணவர்களுக்கு தலா ரூ. 5000.00 வீதம் ஊக்குவிப்புத்தொகை வழுங்கியமை.

2017ம் ஆண்டு உயர் தரம் எடுக்கும் மாணவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்துவதற்கு கணித, விஞ்ஞான மாணவர்களுக்கு எமது கல்லூரி ஆசிலரியர்களின் ஒத்துழைப்புடன் வெளிப்பாடசாலை ஆசிரியர்கள் மூலம் இரவுநேர வகுப்புகள் நடாத்தியமை.

இலண்டன் பழைய மாணவர் சங்க உதவியுடன் குச்சவெளி, ஆலங்கேணி பாடசாலைகளுக்கு 2 நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டமை.

1994ம் ஆண்டு உயர்தர மாணவர்களின் உதவியுடன் உள்ளக தொடர்பாடலை விருத்தி செய்வதற்காக ரூபா 105,000.00 இனை பெற்றுக் கொண்டமை.

பழைய மாணவர் சங்க அறைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து எமது கல்லூரியில் உதைபந்தாட்டக் குழுக்களை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் பயிற்சியாளர்களை நிறுவி நாளாந்தம் பயிற்சிகளை மேற்கொள்கிறமை.

120வது கல்லூரி தினத்தை முன்னிட்டு கூடுதலான பழைய மாணவர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் நீண்ட வீதி நடைபவனி ஒன்றை நடத்தி முடித்தமை.

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு எமது பழைய மாணவர், கேமாவதி வைத்தியசாலையின் உரிமையாளருமாகிய திரு. சசிதரனின் உதவியுடன் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டமை.

அமரர் செல்வி மு.சதாசிவம் அவர்களின் ஞாபகார்த்த விஞ்ஞான வினாவிடைப்போட்டி அவரது பெறா மகன் திரு கோ.மனோகரனின் நிதி அனுசரனையில் நடைபெற்றது.

எமது பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும் கல்லூரியின் அதிபருமாகிய திரு செ.பத்மசீலன் அவர்களின் வெளிநாட்டுப் பயணமொன்றின் போது சுவிஸ் நாட்டில் பழைய மாணவர் சங்கக் கிளை ஒன்றை அமைப்பது தொடர்பில் கலந்துரை யாடப்பட்டது.

பிரான்ஸ் நாட்டின் எமது கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் எமது கல்லூரி அதிபரை சந்தித்து கல்லூரியின் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

கல்லூரி தினத்தை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தின் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் பொங்கல் நடத்தப்பட்டது.

## புலமைப்பரிசில் நிதியம்

வைத்திய கலாநிதி ஹேமச்சந்திரா அவர்களால் ரூபா 120000.00 நிதியுதவியுடன் குமாரசாமி நிதியம் ஆரம்பிக்கப்பட்டமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் சங்கமும் பாடசாலையும்...

பழைய மாணவர் சங்கமானது கல்லூரியின் சகல செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருப்பது மட்டுமன்றி, பழைய மாணவர் சங்கங்களுக்க ஓர் எடுத்துக் காட்டாகவும் திகழ்ந்து வருகின்றது.

இது கல்வி நடவடிக்கையுடன் மட்டுப்படுத்தாது விளையாட்டு, கலை நிகழ்வு, போட்டி நிகழ்வு, கல்லூரி அபிவிருத்தி போன்ற விடயங் களுக்கும் தம்மால் இயன்ற உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்கி வருவதுடன், எமது கல்லூரியுடன் மட்டும் நின்றுவிடாது மாவட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளையும் வளப்படுத்த வேண்டும் என்ற கொள்கைகளுக்கமைய பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமை தாங்கள் அறிந்தவையே. இப் பழைய மாணவர் சங்கமானது இவ்வாறு வளர்ச்சி பெற்றமைக்கு அவ்வவ் காலங்களிலிருந்த அதிபர்கள், ஆசிரியப் பெருந்தகைகள், மாணவச் செல்வங்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் நலன்விரும்பிகளுமே!

இக் கல்லூரி மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்பதுடன் அவ்வாறே பழைய மாணவர் சங்கமும் வளர வேண்டும் என்பதற்காக என்றும் தங்கள் ஒத்துழைப்பை நாடி நிற்கும்.

திரு.ச. சர்வேஸ்வரன்.
செயலாளர், பழைய மாணவர் சங்கம்.
தி/ இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

# 120வது கல்லூரி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சைக்கிளோட்டம் - 2017





# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் ஓர் தொலைப் பார்வை

| S/No | Name of Candidate | Total Marks | District Rank |
|---|---|---|---|
| 1 | U. Koshikan | 194 | 1 |
| 2 | G. Haritpavan | 183 | 6 |
| 3 | S. Madhulan | 177 | 13 |
| 4 | E.Shamyukthan | 176 | 16 |
| 5 | S. Abiram | 173 | 25 |
| 6 | M. H. A.Ahamed | 173 | 25 |
| 7 | J. Bahavan | 173 | 25 |
| 8 | S. Shanji | 172 | 40 |
| 9 | T. Keshavathan | 172 | 40 |
| 10 | R. Sangeerthan | 171 | 48 |
| 11 | J. Prakadheeswar | 170 | 58 |
| 12 | S. Samyahan | 169 | 68 |
| 13 | R. Tharanithan | 168 | 79 |
| 14 | R. Uthes | 166 | 96 |
| 15 | V. S. Jathav | 165 | 105 |
| 16 | T. Tharanikan | 164 | 115 |
| 17 | K. Mathushanan | 163 | 131 |
| 18 | Y. Raethusan | 163 | 131 |
| 19 | R. Sharuksan | 163 | 131 |
| 20 | R. Pakirathan | 162 | 149 |
| 21 | S. Anujan | 162 | 149 |
| 22 | M. Arunesh | 162 | 149 |
| 23 | N. Aksaijith | 162 | 149 |
| 24 | K. Sathurshan | 162 | 149 |
| 25 | M. A.Mohamed Aseef | 159 | 197 |
| 26 | U. Hamsathvan | 159 | 197 |
| 27 | U. Arryah | 159 | 197 |
| 44 | A. N.Dirash Ahamed | 159 | 197 |
| 28 | S. Rukkesh | 156 | 246 |
| 29 | M. Yaviswarthan | 156 | 246 |
| 30 | T. Relukhshan | 156 | 246 |
| 31 | N. Abithan | 156 | 246 |
| 32 | S. Kajanan | 156 | 246 |
| 33 | N.Sutharmikan | 155 | 272 |
| 34 | K. Shananthanan | 155 | 272 |
| 35 | S. Pavitharan | 155 | 272 |
| 36 | I. Varoojan | 154 | 293 |
| 37 | B. Thebak | 154 | 293 |
| 38 | K. Dackshanan | 154 | 293 |
| 39 | M. Abishayan | 154 | 293 |
| 40 | K.Shajeenth | 153 | 314 |
| 41 | J. Danujh | 153 | 314 |
| 42 | V. Redemshan Hamrid | 152 | 345 |
| 43 | V. Aksharan | 151 | 365 |
| 45 | M. J. Althaf Ahamed | 151 | 365 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2016
செல்வன். உதயராஜன் கோசிகன் (194)

தமிழ் மொழி மூலம்
கிழக்கு மாகாணம் 1ம் இடம்
தேசிய மட்டம் 3ம் இடம்



க.பொ.த உயர்தரம் – 2016
செல்வன். ஞானச்செல்வம் கிருத்திகன்

தமிழ் மொழி மூலம்
மாவட்ட நிலை 2ம் இடம்
தேசிய மட்டம் 6ம் இடம்

120வது கல்லூரி தினத்தை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட நடைபவனி
– 2017 –



## க.பொ.த சாதாரண தர வகுப்பு மாணவர்களின் 2016ம் ஆண்டுக்குரிய உயர்அடைவு மட்டம் பற்றிய ஓர் ஆய்வு

| Gender | No Sat (sat in 6 or more subject) | No Pass(Pass in 6 subjects) | No qualified for A/L(3C,3 S&pass in 1st language & maths | No qualified for A/L Physical science ("C" pass in Maths subject) | No qualified for A/L Bio science ("C" pass in Science subject) | No Failed in all subjects( sat in 6 or more subjects) | No pass in "9A" |
|---|---|---|---|---|---|---|---|
| Boys | 160 | 151 | 140 | 107 | 86 | 0 | 17 |
| **Total** | 160 | 151 | 140 | 107 | 86 | 0 | 17 |

| S.No | Subject | Sat | A | % | B | % | C | % | S | % | W | % | Pass | Pass% |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Mathematcs | 160 | 74 | 46.3 | 14 | 8.75 | 19 | 11.88 | 31 | 19.4 | 22 | 13.8 | 138 | 86 |
| 2 | Science | 160 | 39 | 24.4 | 22 | 13.8 | 25 | 15.63 | 58 | 36.3 | 16 | 10.0 | 144 | 90 |
| 3 | English | 160 | 34 | 21.3 | 21 | 13.1 | 44 | 27.5 | 33 | 20.6 | 28 | 17.5 | 132 | 83 |
| 4 | History | 160 | 53 | 33.1 | 25 | 15.6 | 38 | 23.75 | 36 | 22.5 | 8 | 5.0 | 152 | 95 |
| 5 | 1st language(Tamil) | 160 | 59 | 36.9 | 28 | 17.5 | 46 | 28.75 | 23 | 14.4 | 4 | 2.5 | 156 | 98 |
| 6 | Hinduism | 134 | 62 | 46.3 | 25 | 18.7 | 27 | 20.15 | 13 | 9.7 | 7 | 5.2 | 127 | 95 |
| 7 | RC | 12 | 9 | 75 | 2 | 0 | 1 | 0 | 0 | 0.0 | 0 | 0.0 | 12 | 100 |
| 8 | NRC | 3 | 1 | 33.3 | 2 | 66.7 | 0 | 0 | 0 | 0.0 | 0 | 0.0 | 3 | 100 |
| 9 | Islam | 11 | 0 | 0 | 6 | 54.5 | 1 | 9.091 | 4 | 36.4 | 0 | 0.0 | 11 | 100 |
| 10 | Geography | 21 | 4 | 19 | 5 | 23.8 | 7 | 33.33 | 5 | 23.8 | 0 | 0.0 | 21 | 100 |
| 11 | Business &Accounting | 139 | 53 | 38.1 | 17 | 12.2 | 37 | 26.62 | 24 | 17.3 | 8 | 5.8 | 131 | 94 |
| 12 | Music | 43 | 14 | 32.6 | 10 | 23.3 | 14 | 32.56 | 5 | 11.6 | 0 | 0.0 | 43 | 100 |
| 13 | Art | 23 | 5 | 21.7 | 6 | 26.1 | 6 | 26.09 | 6 | 26.1 | 0 | 0.0 | 23 | 100 |
| 14 | Drama& Theatre | 22 | 1 | 4.55 | 7 | 31.8 | 13 | 59.09 | 1 | 4.5 | 0 | 0.0 | 22 | 100 |
| 15 | Tamil Literary | 53 | 27 | 50.9 | 12 | 22.6 | 10 | 18.87 | 3 | 5.7 | 1 | 1.9 | 52 | 98 |
| 16 | English Literary | 17 | 12 | 70.6 | 3 | 17.6 | 2 | 11.76 | 0 | 0.0 | 0 | 0.0 | 17 | 100 |
| 17 | ICT | 79 | 41 | 51.9 | 14 | 17.7 | 17 | 21.52 | 3 | 3.8 | 4 | 5.1 | 75 | 95 |
| 18 | Agriculture& food tech | 8 | 1 | 12.5 | 0 | 0 | 2 | 25 | 1 | 12.5 | 4 | 0.0 | 4 | 50 |
| 19 | Health & physical Edu. | 73 | 50 | 68.5 | 16 | 21.9 | 6 | 8.219 | 1 | 1.4 | 0 | 0.0 | 73 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களின் 2016ம் ஆண்டுக்குரிய உயர்அடைவு மட்டம் பற்றிய ஓர் ஆய்வு

## A/L Result Analysis-2016 (1 st Shy)

| Stream | Subject | A | B | C | S | F | No of sat | No Pass | Pass % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Physical Science | Physics | 1 | 3 | 10 | 18 | 14 | 46 | 32 | 69.57 |
| | Chemistry | 3 | 2 | 9 | 17 | 15 | 46 | 31 | 67.39 |
| | Combined Maths | 5 | 3 | 10 | 10 | 18 | 46 | 28 | 60.87 |
| Bio Science | Physics | 3 | 6 | 6 | 11 | 9 | 35 | 26 | 74.29 |
| | Chemistry | 8 | 6 | 6 | 6 | 9 | 35 | 26 | 74.29 |
| | Biology | 4 | 11 | 2 | 8 | 10 | 35 | 25 | 71.43 |
| Commerce | Accounting | 12 | 9 | 10 | 17 | 12 | 60 | 48 | 80.00 |
| | Economics | 9 | 8 | 14 | 19 | 10 | 60 | 50 | 83.33 |
| | Business Stu. | 10 | 16 | 14 | 16 | 4 | 60 | 56 | 93.33 |
| Arts | Tamil | 0 | 0 | 1 | 3 | 5 | 9 | 4 | 44.44 |
| | Hindu Civ. | 0 | 1 | 3 | 0 | 1 | 5 | 4 | 80.00 |
| | Economics | 0 | 0 | 0 | 0 | 4 | 4 | 0 | 0.00 |
| | Geography | 0 | 0 | 0 | 2 | 7 | 9 | 2 | 22.22 |

### G.C.E O/L Best Performance - 2016

| S.No | Name of The Student | Results | | |
|---|---|---|---|---|
| | | A | B | C |
| 1 | Ravithas Himosh | 9A | | |
| 2 | Suthan Anuvaragan | 9A | | |
| 3 | Leslie George Sheron Clarance | 9A | | |
| 4 | Gangatharan Nalinkumar | 9A | | |
| 5 | Sivanathan Gowshigan | 9A | | |
| 6 | Jeyapalu Jagarshithan | 9A | | |
| 7 | Thevanayagam Pragash | 9A | | |
| 8 | Thiruchelvam Arjithan | 9A | | |
| 9 | Thayalanesan Titus | 9A | | |
| 10 | Baskaran Nirushtihan | 9A | | |
| 11 | Tharmabalan Nevaashahan | 9A | | |
| 12 | Arunan Vishagar | 9A | | |
| 13 | Kovintharajan Mithushan | 9A | | |
| 14 | Jeganmohan Amrithshagar | 9A | | |
| 15 | Soundraraja Vihraj | 9A | | |
| 16 | Varnakulendran Anathiriyan | 9A | | |
| 17 | Arulmurali Arul Viboosan | 9A | | |
| | | | | |
| 1 | Mohanakumaran Keven Christie | 8A | B | |
| 2 | Thangathurai Sanjeevi | 8A | B | |
| 3 | Thavarajah Gunapravin | 8A | B | |
| 4 | Meenadchisundaram Sarvayan | 8A | B | |
| 5 | Kandeepan Mohanadthan | 8A | B | |
| 6 | panchadcharam Thulakshan | 8A | B | |
| 7 | Shanmuganayagam Yutheshtrran | 8A | B | |
| 8 | Pathmaseelan Yanuwarthan | 8A | B | |
| | | | | |
| 1 | Varatharaja Luxshan | 8A | | C |
| 2 | Sriharan Haviprasath | 8A | | C |
| 3 | Vidyaharan Pramothayan | 8A | | C |
| 4 | Arulsivan Thagshan | 8A | | C |
| 5 | Nadesan Jokeesan | 8A | | C |

### G.C.E A/L Best Performance - 2016

| Stream | S.No | Name of the Student | Results |
|---|---|---|---|
| Physical Science | 1 | Arunthavarajah Kirishanthan | 3A |
| | 2 | Rajendran Hosalaraj | 3A |
| Bio | 1 | Gnanachelvam Kiritthikan | 3A |
| | 2 | Rajendran Gopy Prasanth | 3A |
| Commerce | 1 | Kanthithas Ajey | 3A |
| | 2 | Jeyasothinathan Hamsalojan | 3A |
| | 3 | Nanthakumar Thivaharan | 3A |
| | 4 | Rajendran Harishraj | 3A |
| | 5 | Vipulananthan Karushanan | 3A |
| | 6 | Ambalavanappillai Mithunraj | 3A |
| | 7 | Ravisuntharam Thanushan | 3A |
| | 8 | Mahendran Vijayakumar | 3A |

**பிரான்ஸ் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பும் அதிபர் கௌரவிப்பும்**




அமரர் சின்னத்தரை குடும்பத்தினர் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் வருடாந்தம் ரூபா 30000.00ஐ வழங்குகின்றனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016/2017 காலப்பகுதிக்குரிய பழைய மாணவர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள்





# AAA

**Building Construction & Meterials Supplier**

**No.777. NC Road,**
**3rd Mile Post, Uppuveli,**
**Trincomalee.**

# ANUJAN HARDWARE

**Branch: 6th Mile Post**
**Nilaveli Road**
**Periyakulam. Trincomalee.**

**Tel: 026 2050 452, Mob: 077 6396737, 071 3499874**




Printed By: SS DIGITAL'S - 0777 695 635

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org